Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Deposition of witness for | : |
| Name | :Ashok Raj |
| Father's Name | :Krishna Raj |
| Village | :Chennai |
| Taluk | :Chennai |
| Caste | :- |
| Calling | :Legal Executive |
| Religion | :Hindu |
| Age | :25 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.07.2025

MCOP.57/2021 RW1 Name:அசோக்ராஜ்

**முதல் விசாரணை**

என் முதல் விசாரணை சாட்சியத்தினை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதனை என் முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். குற்றஇறுதி அறிக்கை நகல் எ.ம.சா.ஆ.1 ஆகவும், அபராத உத்தரவு நகல் எ.ம.சா.ஆ.2 ஆகவும், குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

வழக்கு சம்மந்தமான விவரங்கள் ஆவணங்களில் அடிப்படையில்தான் எனக்கு தெரியும். புலன்விசாரணை அதிகாரி கொடுத்த ஆவணங்களில் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன். அவர் சம்பவ சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் தனியாக பதிவு செய்யவில்லை.

லாரி மண் சாலையில் நின்றிகொண்டிருந்தது என்பதற்கு தனியாக ஆதாரங்கள் உள்ளதா என்றால் முதல் தகவல் அறிக்கையில் அது குறிப்பிடபட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் சர்வீஸ் சாலையில் லாரி இருந்ததாக குறிப்பிடபட்டுள்ளது. சர்வீஸ் சாலையில் ஒரு வாகனம் மட்டும்தான் செல்லமுடியும் என்றால் சரியல்ல. போக்குவரத்து விதிமுறைக்கு புறம்பாக சர்வீஸ் சாலையில் லாரி நின்றிருந்த காரணத்தால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வீஸ் ரோட்டில் லாரி இருந்ததை நான் ஒப்புக்கொள்கிறேன். விபத்திற்கு லாரி ஓட்டுநர் காரணம் என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவு விபத்திற்கு காரணம் கிடையாது என்றால் சரியல்ல. விபத்து லாரி ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநர் காவல் துறையினர் மிறட்டிதால் வழக்கை ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 23/07/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

Digitally signed by RAJA B
Date: 2025.07.23 11:40:14 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.